# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் -16

# யோர்தான் நதி பற்றின இரகசியம்




## The Mystery of The River Jordan

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# யோர்தான் நதி பற்றின இரகசியம்

# The Mystery of The River Jordan




கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இப்பொழுது நாம் பார்க்கப்போகும் பாடம், இஸ்ரயேல் தேசத்தில் இருக்கிற 'யோர்தான் நதி" ஆகும். இது இஸ்ரயேல் தேசம் முழுவதும் ஓடும் ஒரே நதியாகும். அநேக வரலாற்று சிறப்புக்களை கொண்ட யோர்தான் நதியைக் குறித்து கீழ்வரும் வசனங்களில் வாசிப்போம்.

**2ராஜாக்கள் 5:10**

**'அப்பொழுது எலிசா... அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு. அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான்"**

இங்கு சீரிய தேசத்து படைத்தலைவனாயிருந்த நாகமான், தனக்கு ஏற்பட்ட குஷ்டரோகத்திலிருந்து குணமாகும்படிக்கு, தீர்க்கதரிசியான எலிசாமூலம் யோர்தான் நதியில் ஏழுமுறை முழுகும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதை வாசிக்கிறோம்.

மேலும் நாம் வாசிக்கையில்,

**2இராஜாக்கள் 2:8 / 13,14**

**'அப்பொழுது எலியா, தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான். அது இருபக்கமாகப் பிரிந்தது. அவர்கள் இருவரும் உலர்ந்த தரை வழியாய் அக்கரைக்குப் போனார்கள்"**

**'பின்பு அவன் எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்து திரும்பிப்போய், யோர்தானின் கரையிலே நின்று, எலியாவின் மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து, எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான். தண்ணீரை அடித்தவுடனே அது**

**இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்"**

இங்கு தீர்க்கதரிசியாகிய எலியா அவருடைய சால்வையைப் பயன்படுத்தி யோர்தான் நதியை அடித்தார். தண்ணீரானது வலது இடது புறமாக பிரிந்ததை நாம் வாசிக்கிறாம். மேலும் இஸ்ரயேல் ஜனங்கள் வனாந்தரத்தில் நாற்பது வருட காலமாக சுற்றித்திரிந்தபின்பு, யோர்தானைக் கடந்தபின்பே வாக்குத்தத்த பூமியாகிய கானானுக்குள் நுழைந்தனர் **(யோசுவா 1:1-3)** .

மேலும் இதே யோர்தான் நதியில்தான் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றார்.



**மத்தேயு 3:13**

**'அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார்"**

முதலாவதாக யோர்தான் நதியைக் குறித்தும், அது பாய்ந்தோடும் பாதைகளைக் குறித்தும் பார்ப்போம்.

**யோர்தான் - குறிப்புகள்**

யோர்தான் நதியானது மற்ற எல்லா நதிகளையும்போலவே, பர்வதத்தில் துவங்குகிறது. லீபனோன் தேசத்தில் எர்மோன் பர்வதத்தில் துவங்குகிறது. இந்த பர்வதமானது கடல் மட்டத்துக்குமேல் 9230அடி உயரத்தில் மிக அழகாகக் காட்சி தருகிறது.

இந்த மலையில் இருக்கும் பனிகள் உருகி நான்கு சிறிய நீரோடைகளாக உருவெடுத்து, ஹுலா ஏரியில் ஒன்று கூடுகிறது(தற்போது மெரோம் ஏரி என்றழைக்கப்படுகிறது). இந்த இடம் பார்ப்பதற்கு மிக அருமையான மற்றும் அமைதியான இடமாகவும், தெளிந்த நீருடனும் காட்சியளிக்கிறது. பின்பு தண்ணீரானது ஏரியிலிருந்து திடீரென நீர்வீழ்ச்சியாகிறது.அதினால் அழுக்கும் சேரும் கலந்து கலங்கி காணப்படுகிறது. சில தூரம் பாய்ந்தோடினபிறகு இந்த தண்ணீர் கலிலேயா கடலில் இன்னும் அதிகமாகக் கலங்கின நிலையில் வந்து நிரம்புகிறது. **இந்த கலிலேயா கடலின் வேறு சில பெயர்கள் - கென்னசரேத்து கடல்(லூக்கா 5:1,1இராஜா 15:20), திபேரியு கடல்(யோவான் 6:1,23 ; 21:1)**. பின்பு கலிலேயா கடலின் மறுபக்கத்தில் மீண்டும் ஓடத்துவங்கி இஸ்ரயேல் தேசத்தில் சுமார் 55 மைல் வளைந்து நெளிந்து ஓடி, 1300 அடி கீழே உள்ள சவக்கடலில் வந்து சேருகிறது.

இந்த சவக்கடலுக்கு வந்து சேரும் தண்ணீரின் அளவு தினமும் 60 இலட்சம் டன் ஆகும். அவ்வளவு தண்ணீரையும் இந்த சவக்கடலானது உறிஞ்சிக்கொள்ளும் தன்மை உள்ளதாக இருக்கிறது. இதிலிருந்து வேறொரு நதி புறப்படாமலும் அல்லது இக்கடல் மற்ற கடலோடு கலவாதிருப்பதும் ஒரு அதிசயமாகும்.

**யோர்தான் நதி**

இந்த யோர்தான் நதிக்குள் இருக்கும் இரகசியமென்ன? இதில் நாம் கற்கவேண்டிய பாடம் ஏதாவது உள்ளதா?

**யோர்தான் என்ற பெயருக்கு 'இறங்குதல்** (Descending)" என்றுபொருள்படும். எர்மோன் பர்வதத்திலுள்ள 'ஹுலா ஏரி"யிலிருந்து கீழே விழுகிற நொடிப்பொழுதிலிருந்து யோர்தான் நதியாக மாறுகிறது.

இந்த யோர்தான் நதியானது தெய்வீகத் திட்டத்தின்படி முதலாம் மற்றும் இரண்டாம் உலகில் மனுக்குலம் பாவத்தின் பிடியிலும் மரணத்தின் அடிமைத்தனத்திலும் வீழ்ந்திருப்பதன் போக்கை அடையாளப்படுத்துவதாக உள்ளது. இது ஒரு அருமையான அடையாளமாகும்.

**எர்மோன் மலை** - தேவனுடைய இருப்பிடத்தையும், அவரது சர்வ வல்லமையையும் குறிக்கிறது




**ஏசாயா 57:15**

**'நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்... உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான்.."**

**பனி** - தேவனிடத்திலிருந்து வரும் பரிசுத்தஆவியைக் குறிக்கிறது

**சங்கீதம் 133:2,3**

**'..ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும் எர்மோன்மேலும் சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது"**

ஆரோனின் சிரசின்மேல் வடிகிற தைலமானது, எர்மோன் பர்வதத்தின்மேல் பொழிகிற பனிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. எர்மோன் பர்வதம் தேவனுடைய இருப்பிடத்தைக் குறிப்பதுபோல், பனியானது அவருடைய பரிசுத்தஆவியைக் குறிக்கும்.

**நான்கு சிறிய நீரூற்றுக்கள்** - நான்கு ஜீவன்களைக் குறிக்கிறது. இது தேவனுடைய நான்கு குணலட்சணங்களைக் குறிக்கிறது. அன்பு-மனித முகம், நீதி - காளை முகம், ஞானம் - கழுகு முகம், வல்லமை - சிங்க முகம்.

**வெளிப்படுத்தல் 4:6,7**

**'அந்த சிங்காசனத்தின் மத்தியிலும் அந்த சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன"**

**ஊலா ஏரி** - நான்கு நீரூற்றுக்களிலும் உருவான தேவனுடைய முதல் சிருஷ்டிப்பான ஆதாம் ஏவாளைக் குறிக்கிறது(ஆதி 1:26,27).

**எதிர்பாராத வீழ்ச்சி** - பரிபூரண நிலையில் ஏதேனில் இருந்த மனிதன் பாவத்தினால் வீழ்ச்சியடைந்ததைக் குறிக்கிறது

ரோமர் 5:12

**'இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று"**

**கலங்கின தண்ணீர்** - முதலாம் உலகில் மனிதன் சீக்கிரமாய் வீழ்ச்சியடைந்த பாவக்கறையைக் காண்பிக்கிறது(ஆதி 6:5)




**கலிலேயா கடல்** - யோர்தான் நதியானது கலங்கின நிலையில் பயணித்து மிகப்பெரிய நீர்நிலையாகிய கலிலேயா கடலில் முடிவடைகிறது. கலிலேயா கடல் ஜலப்பிரளயத்தைக் குறிக்கிறது.

**இவைகளின் விளக்கம்** : மேற்குறிப்பிட்ட சம்பவங்களெல்லாம் முதலாம் உலகத்தில் நடைபெற்றதற்கு அடையாளமாக யோர்தான் நதி சித்தரிக்கிறது.

பரலோகத்தில் வாசம்செய்கிற தேவன் தம்முடைய வல்லமையினால் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார். தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் பரிபூரண நிலையிலிருந்து விழுந்து, பாவ சாயலாக மாறியதைக் குறிக்கிறது. இதன்மூலம் முழு மனுக்குலமும் பாவத்தில் விழுந்தது. ஆதாமின்மூலம் தோன்றிய சந்ததியின் அக்கிரமம் பெருகியதைக் கண்ட தேவன்(நோவா மற்றும் அவர் குடும்பத்தார் தவிர) பூமி முழுவதையும் ஜலத்தினால் அழிப்பதை இந்த யோர்தான் நதியின் தோற்றம் மிக அழகாக காண்பிக்கிறது. மேலும் இந்த நதியைக் குறித்துப் பார்க்கும்போது,

கலிலேயாவில் கலங்கிய நிறத்துடன் விழுந்த தண்ணீர் அதிலிருந்து நிரம்பி, சற்று தெளிந்த தண்ணீராக கலிலேயாவிலிருந்து புறப்படுகிறது.

இது எதைக் குறிக்கிறது என்றால், அக்கிரமம் நிறைந்த பூமியை(முதலாம் உலகம்) தேவன் ஜலத்தினால் அழித்தபிறகு நீதிமானாகிய நோவா குடும்பத்தார் இப்புதிய பூமியில்(இரண்டாம் உலகம்) மீண்டுமாய் வாழத் துவங்கியதைக் காட்டுகிறது.

யோர்தான் நதி வளைந்து நெளிந்து சுமார் 55 மைல் போவது, இரண்டாம் உலகத்தைக்

குறிக்கிறது. வளைந்து வளைந்து செல்வது இரண்டாம் உலகத்திலும் மனிதனின் சுபாவம் கெட்டுப்போயுள்ளதைக் குறிக்கிறது. இதைக் குறித்து வாசிக்கையில்,

ஏசாயா 59:8

**'சமாதான வழியை அறியார்கள். அவர்கள் நடைகளில் நியாயமில்லை, தங்கள் பாதைகளைத் தாங்களே கோணலாக்கிக் கொண்டார்கள். அவைகளில் நடக்கிற ஒருவனும் சமாதானத்தை அறியான்"**

மனுக்குலத்தின் போக்கு மீண்டும் கோணலாகத் துவங்கியது. இதைக் குறித்து வாசிப்போம்

பிரசங்கி 1:27

**'இதோ தேவன் மனுஷனை செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாய தந்திரங்களை தேடிக்கொண்டார்கள்"**

மனிதனுடைய கோணலும் மாறுபாடுமுள்ள வழிகள்(பாவ வழிகள்) அவனை ஆட்கொண்டன.

நீதிமொழிகள் 14:12

**'மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள்"**


சவக்கடல்

மரண வழிகள் என்பது பாவ வழிகளேயாகும். ஏனெனில் பாவத்தின்மூலமே மரணம் வருகிறது. மனுக்குலமானது, 'பாவவழிகள்" சரியான வழிகள் என்று தோன்றுமளவு அதில் பழக்கப்பட்டிருக்கின்றனர். நாம் செய்கிற, பேசுகிற, சிந்திக்கிற காரியங்களை சற்று சிந்திப்போமானால் பாவ வழிகள் எந்தஅளவு உலகில் ஊடுருவியுள்ளது என்பதை உணரலாம்.

இவ்வாறு வளைந்து வளைந்து செல்கிற யோர்தான் நதி சவக்கடலில் சேர்கிறது. இந்த சவக்கடலில் எந்த உயிரினமும் உயிர்வாழமுடியாது. இதில் எவ்வளவுதான் தண்ணீர் வந்து நிறைந்தாலும் அவ்வளவு தண்ணீரையும் இழுத்துக்கொள்ளும் தன்மையுடையது.

இது எதைக் குறிக்கிறதென்றால், முழு மனுக்குலமும் மரணத்திற்குச் செல்வதைக் குறிக்கிறது.

நீதிமொழிகள் 14:12 **'..அதின் முடிவோ மரண வழிகள்.."**

சவக்கடல் மனிதனின் முடிவைக் குறிக்கிறது. சவக்கடலில் எவ்வளவு தண்ணீர் வந்தாலும் இழுத்துக்கொள்ளும். பாதாளமும் இதுபோலவே.

அப்படியானால், ஒவ்வொரு நாளும் சவக்கடலில் சென்றடைகிற 60 லட்சம் டன் தண்ணீரும் நிரம்பி வழியாததன் முக்கியத்துவம் என்ன? பின்வரும் வசனம் விடைதருகிறது.

நீதிமொழிகள் 30:15,16

**'அவையாவன... பாதாளமும் , மலட்டுக் கர்ப்பமும், தண்ணீரால் திருப்தியடையாத நிலமும், போதுமென்று சொல்லாத அக்கினியுமே"**

இரண்டாம் உலகத்தின் மனுக்குலம் முழுவதும் மரித்தாலும் இன்னும் பாதாளம் கேட்டுக்கொண்டே இருக்கிறது. போதும் என்று திருப்தியடையவில்லையே.

சவக்கடலானது கடல் மட்டத்திலிருந்து 1300அடி ஆழத்தில் உள்ளது, எதைக் குறிக்கும்? யோர்தான் நதியானது கடல் மட்டத்திலிருந்து 1300 அடி ஆழத்தில் முடிவடைகிறது. தேவன் மனிதனை சிருஷ்டித்த பரிபூரண நிலையிலிருந்து மனிதன் விலங்குக்குக் கீழான நிலையில் வீழ்ந்து கிடப்பதைக் குறிக்கும்.

எரேமியா 51:17

**‘மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் மிருக குணமுள்ளவர்களானார்கள்”**

**தானியேல் 4:32-37** ' வசனப் பகுதியில் மனிதன் தன்னுடைய நிலைமையிலிருந்து எவ்வளவாய் மிருக குணமுள்ளவனாக மாறினான் என்பதை நேபுகாத்நேச்சார் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்துகொள்ளமுடிகிறது.

இவ்வாறு முழு மனுக்குலமும் முதலாம் மற்றும் இரண்டாம் உலகத்தில் மரணத்தை நோக்கி சென்றுகொண்டு இருப்பதைக் காண்கிறோம். மனுக்குல வரலாற்றின் முடிவு இதுதானா? தேவகிருபையில் இதற்கான பதில் ‘இல்லை” என்பதேயாகும்.

மரணத்துக்கு வழிநடத்தும் நதியாகிய யோர்தான் நதி, மேற்கண்ட வசனத்தில் உள்ளபடி தேவனுடைய ராஜ்யத்தில் ‘ஜீவனுக்கு வழிநடத்தும் நதியின்மூலம் புதுப்பிக்கப்படும். அந்த ஜீவ நதியைக் குறித்து மூன்று வசனங்களில் நாம் வாசிக்கிறோம் -

எசேக்கியேல் 47:1 / சங்கீதம் 46:4 / வெளிப்படுத்தல் 22:1

**‘பின்பு அவர் என்னை ஆலயத்தின் வாசலுக்குத் திரும்பிவரப் பண்ணினார். இதோ வாசற்படியின் கீழிருந்து தண்ணீர் புறப்பட்டுக் கிழக்கே ஓடுகிறதாயிருந்தது. ஆலயத்தின் முகப்பு கிழக்கே நோக்கியிருந்தது. அந்தத் தண்ணீர் ஆலயத்தின் வலதுபுறமாய்ப் பலிபீடத்துக்குத் தெற்கே பாய்ந்தது”**

**‘ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்”**

**‘பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்”**

மேற்கண்ட வசனங்களில் சொல்லப்பட்டுள்ள நதி நிஜமான நதியல்ல.மாறாக, தரிசனத்தில் காண்பிக்கப்படும் உருவக பாஷையில் சொல்லப்பட்டுள்ள நதியாகும். இந்த நதி எதைக்குறிக்கிறதென்றால், தேவனுடைய சத்தியத்தைக் குறிக்கிறது. முதலாம் இரண்டாம் உலகத்தில் மரித்த நிலையில் உள்ள முழு மனுக்குலத்திற்கும் ஜீவனைத் தர (1000 வருட அரசாட்சி) இந்த நதி வருகிறது. எவ்விதத்தில் பாவ மனுக்குலம் முழுவதையும் சுத்திகரிக்கமுடியும்? இதற்கான பதிலை வாசிக்கலாம்

யோவான் 17:17

**‘உம்முடைய வசனத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்”**

எசேக்கியேல் 47:3-6

**‘அந்தப் புருஷன் தமது கையில் நூலைப் பிடித்துக்கொண்டு, கிழக்கே புறப்படுகையில் ஆயிரமுழம் அளந்து என்னைத் தண்ணீரைக் கடக்கப்பண்ணினார். தண்ணீர் கணுக்கால் அளவாயிருந்தது. பின்னும் அவர் ஆயிரமுழம் அளந்து, என்னைத் தண்ணீரைக் கடக்கப்பண்ணினார்.அங்கே தண்ணீர் முழங்கால் அளவாயிருந்தது. பின்னும் அவர் ஆயிரமுழம் அளந்து என்னைக் கடக்கப் பண்ணினார் அங்கே தண்ணீர் இடுப்பளவாயிருந்தது. பின்னும் அவர் ஆயிரமுழம் அளந்தார். அங்கே அது நான் கடக்கக்கூடாத நதியாயிருந்தது. தண்ணீர் நீச்சலாழமும் கடக்கமுடியாத நதியுமாயிருந்தது. அவர் என்னைநோக்கி - மனுபுத்திரனே இதைக் கண்டாயா என்றுசொல்லி, என்னை நதியோரமாய்த் திரும்ப நடத்திக்கொண்டுபோனார்”**

இங்கு தண்ணீர் படிப்படியாக பாய்ந்து, பின்பு பெருகுவது, பூமியின் ராஜ்யங்கள் படிப்படியாக பெறுகிற சத்தியத்தையும், அதனால் வருகின்ற சீர்பொருந்துதலையும் குறிக்கும்
மனித உடலின் வெவ்வேறு உயரத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள தண்ணீர் - முழு மனுக்குலத்தையும் குறிக்கும்

* **தண்ணீர் கணுக்கால் அளவாயிருந்தது** - சத்தியமானது ஆரம்பத்தில் சிறிய தேசமாகிய இஸ்ரயேல் தேசத்துக்கு வெளிப்படுத்தப்படும் -

சகரியா 14:8

**‘அந்நாளிலே ஜீவத்தண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போய், மாரி காலத்துக்கும் கோடைகாலத்துக்கும் இருக்கும்”**

* **தண்ணீர் முழங்கால் அளவாயிருந்தது** - சரீரத்தின் 1.:.4 பகுதியைக் குறிக்கும். உலகின் கால்பகுதி தேசங்களுக்கு சத்தியம் சென்றுசேர்ந்து ஏற்றுக்கொள்ளப்படுவதைக்குறிக்கும்

ஏசாயா 2:3

**‘திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து, நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்.ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்..”**

அதாவது தேசங்கள் அனைத்தும் தேவனைப்பற்றியும், அவருடைய இராஜ்யத்தைப் பற்றியும் அதன் ஆசீர்வாதங்களைப் பற்றியும் அறிந்துகொள்ள எருசலேமுக்கு வருவார்கள்.

***ஆயிரம் முழம்** - இது ஒரு காலப்பகுதியைக் குறிக்கும்

'**தண்ணீர் இடுப்பளவாயிருந்தது** " - இடுப்பளவு என்பது சரீரத்தின் பாதியை குறிக்கும்(½ ). உலகின் ஒரு பாதி தேசங்கள் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு ஆசீரடைவதைக் குறிக்கிறது

சகரியா 8:22

**'அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ணவும் வருவார்கள்"**

'**தண்ணீர் நீச்சாழமும் , கடக்கமுடியாத நதியுமாயிருந்தது** - இது மனிதனுடைய மொத்த அளவைக் குறிக்கும். விரைவில் உலக மனுக்குலம் முழுவதும், சத்தியம் மற்றும் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்குள் வருவார்கள. இதைக்குறித்து நாம் வாசிக்கையில்,

சங்கீதம் 72: 8

**'ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரம்வரைக்கும் நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்"**

இந்த படிப்படியான வளர்ச்சி தானியேல் 2:35 வசனத்தில், கல் வளர்ந்து பெரிய பர்வதமானது என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை குறிக்கும். மேலும்

ஏசாயா 9:7

**'..அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை"**

தேசங்களின்மீதான இராஜ்யத்தின் அதிகாரமானது படிப்படியாக வளரும். அதன் பெருக்கத்திற்கு முடிவில்லை. மேலும் இயேசு தம் ராஜ்யத்தின் வேலைகளில் முதல் திறவுகோலை பயன்படுத்துவதை நாம் வாசிக்கையில்,

வெளிப்படுத்தல் 1:18

**'நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவனாயிருக்கிறேன்"**

மரணம் பாதாளம் இவைகளின் திறவுகோல்கள் எதைக் குறிக்கிறது?
திறவுகோல்கள் - மரித்தவர்கள் மற்றும் 'உயிருள்ள மரித்தோர்" ஆகிய உலக ஜனங்கள்மேல் உள்ள அதிகாரத்தைக் குறிக்கும் **(லூக்கா 9:60).**

இவர்கள் எல்லாரும் பாதாளத்தை நோக்கியே செல்கின்றனர். பாதாளத்தின் திறவுகோல் எதைக் குறிக்கிறதென்றால், உண்மையிலேயே மரித்தவர்கள் அடக்கம் செய்யப்பட்டதைக் குறிக்கிறது. இவர்களை உயிரோடு எழுப்பக்கூடிய அதிகாரம் இயேசுகிறிஸ்து 1000 வருட அரசாட்சியின் ஆரம்பத்தில் பெறுகிறார்.

யோவான் 5:28

**'இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம்வரும்"**

எசேக்கியேல் 47:8,9

**'இந்தத் தண்ணீர் கிழக்கு தேசத்துக்குப் புறப்பட்டுப்போய் வனாந்திர வழியாய்**

**ஓடி கடலில் விழும்( Dead sea - NIV). இது கடலில் பாய்ந்து விழுந்தபின்பு, அதன் தண்ணீர் ஆரோக்கியமாகும். சம்பவிப்பது என்னவென்றால், இந்த நதி போகுமிடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவப்பிராணிகள் யாவும் பிழைக்கும். இந்தத் தண்ணீர் அங்கே வந்தபடியினால் வெகு ஏராளமான மச்சங்களும் உண்டாயிருக்கும், இந்த நதி போகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும்“**

இந்த நதி சவக்கடலுக்கு ஜீவனைக் கொண்டுவருகிறது. இவ்வாறு இக்கடல் குணப்படுகிறது.இதற்கு முன்பு நாம் பார்த்தபடி, யோர்தான் நதியில் சென்று முடிவில் சவக்கடலுக்கு செல்லும் மச்சங்கள், மீன்கள், மற்ற உயிரினங்கள் யாவும் மரிக்கும்

ஆனால் இந்த நதியில் யாவும் ‘ஆரோக்கியப்பட்டு பிழைக்கும்” என்று வாசிக்கிறோம். இந்த மச்சங்கள், மீன்கள் யாரைக் குறிக்கிறது? மனிதர்களையே குறிக்கிறது(மத்தேயு 4:19).

ராஜ்யத்தின் அதிகாரம் உலக முழுவதும் ஸ்தாபிக்கப்படுவதைக்குறித்து மேலும் நாம் வாசிக்கையில்,

எசேக்கியேல் 47:12

**’நதியோரமாய் அதன் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வளரும். அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை. அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும். அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள்“**

இந்த மரங்களும் இலைகளும் எதைக் குறிக்கிறது? இதைக் குறித்து நாம் வாசிப்போம்

வெளிப்படுத்தல் 22:2

**‘நகரத்து வீதியின் மத்தியிலும் நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்“**

இங்கு கூறப்பட்டுள்ள மரங்கள், கனிகள், இலைகள் ஆகியவை ஏதேன் தோட்டத்தில் முன்பிருந்த ஜீவ விருட்சமாகிய நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதைக் குறிக்கிறது(ஆதி 3:22).

**இலைகள்** : இதன் இலைகள் என்பது மருத்துவத்திற்கும் நோய்களை குணப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, இந்தியாவில் இலைகள் ஆயுர்வேத மருத்துவத்தில் நோய்களை குணப்படுத்துவதற்கு மருந்தாக பயன்படுகிறது. இங்கு இலைகள் என்பது மனந்திரும்புபவர்கள் பரிபூரணத்தை நோக்கி உயர்த்தப்படுவதற்கு ஏதுவாக, அவர்களுடைய

சரீரத்திலும் மனதிலும் ஒழுக்க ரீதியிலும் குணமாகுதலைக் குறிக்கும். இதுவே வேதத்தில் திரும்பக் கொடுத்தல்( Restitution) என்று அழைக்கப்படுகிறது. இதைக் குறித்து வாசிப்போம்

அப்போஸ்தலர் 3:21

**'..கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் (Day of Refreshing - KJV)வரும்படிக்கும்.."**

அபூரணத்திலிருந்து பூரணத்திற்கு திரும்புகிற திரும்பக்கொடுத்தலானது உலக ஜனங்கள் குணப்படுதலையே இலைகள் குறிக்கிறது.

**கனிகள்** - இவைகள் ஜீவன் கொடுக்கிற உணவை அடையாளப்படுத்துகிறது. இது அவர்கள் உட்கொள்ளும் ஆவிக்குரிய உணவாகிய தேவ வார்த்தைகளாகும். இதைக் குறித்து நாம் வாசிக்கையில்,

எரேமியா 15:16

**'உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும்.."**

'உட்கொண்டேன்" என்பது, தேவனுடைய வார்த்தைகளில் காணப்படுகிற அறிவுரை அல்லது ஊக்கப்படுத்துதலைப்பெற்று கீழ்ப்படியும்போது, ஜீவனை தக்கவைத்துக்கொள்வதற்கான வழி காண்பிக்கப்படுவதைக் குறிக்கும். இப்படியாக நித்திய ஜீவனானது பெற்றுக்கொள்ளப்படும்.

1யோவான் 5:12

**'குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்"**

குமாரனுடைய சாயலைப் பெற்றிருப்பதையே நித்திய ஜீவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

எபிரேயர் 1:9

**'நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்"**

இதுவே குமாரனுடைய சாயலாகும். ஜீவனைத் தேடுகிற ஒவ்வொருவரும் இந்த சாயலை வளர்த்துக் கொள்வது அவசியம்.

ஜீவ நதி குறித்து இறுதியாக நாம் வாசிப்போம் -

எசேக்கியேல் 47:11

**'ஆனாலும் அதினுடைய உளையான பள்ளங்களும் அதினுடைய மடுக்களும் ஆரோக்கியமாகாமல் உப்பாகவே விட்டுவிடப்படும்"**

ஜீவ நதியை எதிர்க்கும் வகுப்பாரை இது குறிக்கும். இவர்கள் துணிகரமாக கீழ்ப்படியாமைக்குள் செல்லும் ஜனங்களாவர்.

ஏசாயா 26:10

**'துன்மார்க்கனுக்குத் தயைசெய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான். நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து, கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதே போகிறான்.**

துணிகரமாக கீழ்ப்படியாமைக்குள் செல்லும் இந்த வகுப்பார், தேவனுடைய நீதியின்

கட்டளைகளை எதிர்த்துநின்று, தேவனுக்கு எதிராளிகளாகி, விழுந்துபோன தூதர்களைப்போல் ஆவார்கள். இவர்கள் குமாரனுடைய சாயலை அல்லாமல் வேறொரு சாயலை வளர்த்துக் கொள்கின்றனர். இவர்கள் உப்பாகவே விடப்படுவார்கள், அல்லது இரண்டாம் மரணத்தில் நித்தியமாக அழிக்கப்படுவார்கள். இதைக் குறித்து நாம் வாசிப்போம்-


லோத்தின் மனைவி- உப்புத்தூண

ஆதியாகமம் 19:26

**‘அவன்(லோத்து) மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத் தூண் ஆனாள்”**

லோத்தின் மனைவி துணிந்து கீழ்ப்படியாமைக்குள் செல்பவர்களுக்கு அடையாளமாக இருக்கிறாள். இப்படிப்பட்டவர்கள் பாவ வழிகளிலிருந்து விடுபட்டு, நீதிக்கு கீழ்ப்படிய மறுப்பதால் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவதே இவர்களது முடிவு.

இப்படியாக இன்று நாம் யோர்தான் நதியைப் பற்றியும், அதற்குள் அமைந்துள்ள சவக்கடலின் தண்ணீரை ஜீவனுள்ளதாக்கும் ‘ஜீவநதி” பற்றியும் அறிந்துகொண்டோம்.

***தேவன் தாமே நமக்கு கிருபை அளிப்பாராக, ஆமென்.***

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/


பனி
எர்மோன் பர்வதம் (9230அடி)
ஹுலா ஏரி
லீபெனான்
முதலாம் உலகம்
ஜலப்பிரளயம்
இரண்டாம் உலகம்
கலிலேயா கடல் (ஏரி)
55 மைல் வளைந்து நெளிந்த பாதை
இஸ்ரயேல்
1300 அடி ஆழத்தில் உள்ள
சவ கடல்